REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

## தமிழ் நாட்டில் தேர்தலுக்கான தேதிகள்!

சென்னை, சன. 10—

தமிழ் நாட்டில் சட்டசபைக்கும், மக்கள் சபைக்கும் தேர்தலுக்கான தேதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

மார்ச் 1, 4. 6, 8, மற்றும் 11-ந் தேதிகளில், ஐந்து கட்டங்களில் தேர்தல் நடைபெறும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மலர் 4] சென்னை: மார்கழி 28உ வெள்ளி (11—1—57) ★ ★ வெளியூர்: மார்கழி 29உ சனி (12—1—57) [இதழ் 185

# பன்னீர் மணக்கும் பணம் வியர்வை மணக்கும் பணத்தால் வெல்லப்படுவது நிச்சயம்

## நாம் ஏழைகளாயிருக்கலாம்; ஆனால் ஏமாளிகளல்ல!

### காங்கிரஸ் ஓட்டுப்பெறும் இலட்சணத்தை உலகறியப் பறை சாற்றுவோம்

### திருவல்லிக்கேணி கடற்கரையில் அண்ணா பரணி

9—1—57 மாலை சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில், திராவிட மாதர்கள் சார்பில் நடைபெற்றத் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக்கூட்டத்தில் கருத்துரை வழங்கின அண்ணா அவர்களது சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"காங்கிரசுக்குக் கோவையில் மட்டும் ரூ. 3½ இலட்சம் தரப்பட்டதாம். இதைப் பெறுவதற்கு, கோவைக்குப் பத்துநாட்கள் நடையாக நடந்தார்களாம்! பல் முப்பத்திரண்டும் தெரியவில் முதலாளிகளிடம் இளித்தார்களாம்! அதுவும் எனக்குத் தெரியும்.

"இந்தப் பணத்தை, யார் யார் எப்படிச் செலவிடுவது என்பதிலே இப்போது தகராறாம்! அதுவும் எனக்குத் தெரியும்.

"ஆனால், காங்கிரசாரிடம் உள்ள பணம், நான் அடிக்கடி கூறியது போல, குஷ்டரோகியின் கையிலிருக்கும் வெண்ணெய்க்குச் சமானமாகும். அந்தப் பணத்தில் பன்னீர் வாடைகூட இருக்கலாம்; ஆனால் நம்மிடம் நடைபாதை வியாபாரிகளும் முடிதிருத்துவோரும், உடை வெளுப்போரும் தந்துள்ள பணத்தில் வியர்வையின் வாடை இருக்கிறது!

"வரலாறு, பன்னீர் பட்ட பணத்தை வியர்வை பட்ட பணம் தான் வென்றதாகக் கூறுகிறது என்பதைக் காங்கிரசாருக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

"தைரியமிருந்தால் காங்கிரசார், தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே ஓட்டுக்காகப் பணம் தந்து பார்க்கட்டும்; அந்தப் பணத்தை நாணயவான்கள் வாங்க மாட்டார்கள். அப்படியே வாங்குகிறவர்கள் மறுநாளே இதுபோல கடற்கரையில் கூட்டம் போட்டு, 'காங்கிரசார் ஓட்டுக்காகக் கொடுத்த இந்தப் பணத்தை உங்களிடம் தந்துவிடுகிறேன்' என்று என்னிடம் தருகிறார்களா, இல்லையா பாருங்கள்!

"ஓட்டுக்களைப் பணம் கொடுத்து வாங்கிவிடலாம் என எண்ணதி விருக்கும் காங்கிரசாருக்குச் சொல்லுவேன்—நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல; எங்களிடம் பணம் இல்லாமலிருக்கலாம்; நாங்கள் ஏழைகளாயிருக்கலாம்; ஆனால் ஏமாளிகள் அல்ல! பணம் கொடுப்பதை, நமது தோழர்கள் படம் எடுப்பார்கள் — நினைவிலிருக்கட்டும்! எடுக்கப்படும் படத்தைக் கொண்டு, காங்கிரசாரின் தேர்தல் செல்லாது என்று அறிவிக்க முடியுமோ முடியாதோ—ஆனால், அந்தப் படங்களைப் பத்திரிகைகள் பலவற்றிலும் வெளியிட்டு, காங்கிரஸ் ஓட்டுப் பெறும் இலட்சணத்தை ஊருக்கும் உலகத்திற்கும் பகிரங்கப் படுத்துவோம் என்பதையும் காங்கிரசார் மனதில் கொள்ளட்டும்!

"திராவிடத் தாய்மார்கள் இன்று கழகத்திற்கு நிதியளித்து கழகத்தைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். நம்மை நமக்கேதந்த பெருந்தன்மையும் பெருமையும் கொண்ட தாய்மார்கள் இன்று நமக்கு நிதியும் தந்து, நமது காரியங்களுக்குத் துணைபுரிவது பெருமைக்குரியது மட்டுமல்ல— நமது ஆழ்ந்த நன்றிக்கும் உரியதாகும்.

"இதுபோன்ற தேர்தல் நிதியளிப்பு விழாக்களில், நாடெங்கிலும், நாங்கள் ஒரு பெரும் திருவிழாக்கோலத்தையே காண்கிறோம். மக்களின் எழுச்சியான அந்தக் கோலம், எங்களுக்குப் பூரிப்பையும் நம்பிக்கையையும் தருகிறது. மக்கள் இதுபோது காட்டுகிற ஆவலையும் உற்சாகத்தையும் எழுச்சியையும், தொடர்ந்து காட்டுவார்களேயானால், ஒரு நாளைக்கு நாம் இதே கடற்கரையில் வெற்றி விழாக் கொண்டாடத்தான்போகிறோம்.

"தேர்தல் நிதியாக தாய்மார்கள் ஆயிரம் ரூபாயும், மற்றும் பலர் தங்கள் முயற்சியின் அளவுக்கொப்பவும் நிதி தந்தார்கள். இதுபோல நிதி வழங்கப்படுவது இரண்டே சம்பவங்களின்போதுதான்; ஒரு சம்பவம், வீட்டிலும், மற்றது நாட்டிலும் நடைபெறுவது. திருமணங்களின்போது, மணமகனுக்கும் மணமகளுக்கும் வேண்டியவர்கள்—உறவினர்கள் நண்பர்கள் எல்லாம் 'மொய்' எழுதுவார்கள்; அது வீட்டில் நடைபெறுவது!

"நாட்டிலே நடைபெறுவது, இங்கே நிதி வழங்கப்படுவதாகும். தன் நாட்டிற்கு ஆபத்து என்று தெரிந்ததும், அந்த ஆபத்தை முறியடிக்க நாட்டு மக்கள் நம் போன்றோர்க்கு உதவுவதுதான் அந்தச் சம்பவம்!

"அந்த நாட்களில் நாட்டுக்கு ஆபத்து என்றால் வீட்டுக்கு ஒரு வீரனை அனுப்பித் தருவர். இந்தக் காலத்தில் வீட்டுக்கொரு வீரன் மட்டும் போதாது என்பதால், அந்த வீரர்கள் விடுதலைக் காரியங்களில் ஈடுபட நிதியும் தந்து உதவுகிறார்கள், மக்கள்!

"இங்கே முடிதிருத்துவோர் நிதி தந்தார்கள்; முடி திருத்துவது, மூக அவலட்சணத்தைப் போக்க! அவர்கள் தந்த நிதியைக் கொண்டு நாம் ஆட்சியில் உள்ள அவலட்சணத்தைப் போக்குவோம்.

"உடை வெளுப்போர் நிதி தந்தார்கள். உடை வெளுப்பது, உடையிலுள்ள அழுக்கைப் போக்க! அவர்கள் தந்த நிதியைக் கொண்டு நாம் தமிழ் நாட்டு அரசியலில் படிந்திருக்கும் அழுக்கினைப் போக்குவோம்!

"இன்னும் போக்குவரத்துத் தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்கள் எல்லாம் நிதி தந்திருக்கிறார்கள். அவர்களது பான்மையை, மாண்பினை, வீர உணர்வினை எடுத்துக்காட்டும் வகையில் அவர்கள் நிதி தந்திருக்கிறார்கள்.

"இது, நாம் பெறப்போகும் வெற்றிக்கான முன்னறிவிப்பு என்றே நான் கருதுகிறேன்; அவர்களுக்கெல்லாம் கழகத்தின் சார்பில் நன்றி கூறிக்கொள்கிறேன்."

[பேச்சு முடியவில்லை; நாளையும் வெளிவரும்]

★★★★★★★★★★★★★★★★★★

## சென்னை - வண்ணை

தொகுதி கிளைக் கழகங்களுக்கு:

★

சென்னை--வண்ணாரப்பேட்டை தொகுதியைச் சேர்ந்த 1, 2, 3, 4-ஆம் வட்ட தி. மு. கிளைக் கழகச் செயலாளர்களையும், செயற்குழு உறுப்பினர்களையும் தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக்குழுவின் தலைவர் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சந்திக்க விரும்புகிறார்கள்.

13—1—57 ஞாயிறு மாலை 3-மணிக்கு, மேற்கண்ட வட்ட கிளைகளின் செயலாளர்களும், செயற்குழு உறுப்பினர்களும் இராயபுரம் 'அறிவகத்'தில் தவறாது சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★-★★★★★★★★

## தமிழ் நாட்டில் தேர்தல் ஏற்பாடுகள்

### தி. மு. க. உட்பட பல கட்சிகளையும் சர்க்கார் கலந்தாலோசித்தது

#### மேற்கொண்ட முடிவுகளின் விவரம்

சென்னை, சன. 11—

வந்துகொண்டிருக்கிற பொதுத் தேர்தல்கள் சமூகமாக நடைபெறுவது பற்றிச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள், கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்பற்றி ஆலோசிப்பதற்காகத் தேர்தலில் ஈடுபடும் கட்சிகள் பலவற்றின் பிரதிநிதிகளுடன் நேற்று பகல், சர்க்கார் அலுவலகத்தில், நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் ஆலோசனை நடத்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தெ. ஆ. மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்களும் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மற்றும் காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பி. சோ., சோஷலிஸ்டு கட்சிகளின் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், தேர்தல் காலத்தில் பொதுக் கூட்டங்கள் நடத்துவதை ஒட்டிய ஒலி பெருக்கிகள் உபயோகிப்பது, கூட்டம் நடத்தும் நேரம் நிர்ணயிப்பது, இடம் தேடுவது, அனுமதி பெறுவது போன்ற விவகாரங்களைக் குறித்து விவாதித்தனர் என்றும் தெரியவருகிறது.

கூட்டம் நடத்துவதற்கான இடங்களை, முனிசிபல் நகரங்கள், பெரும் பஞ்சாயத்து நகரங்களில் முன்கூட்டியே ஸ்தல அதிகாரிகளைக்கொண்டு நிர்ணயித்து அறிவித்துவிடுவதெனவும், அப்படி நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் எல்லாக் கட்சியினரையும் பிரச்சாரக் கூட்டம் நடத்த அனுமதிப்பது என்றும், கூட்டம் நடத்துவதற்குப் போலீசாரிடம் அனுமதி பெற்றுக் கொள்வது என்றும் எல்லாக் கட்சியினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சூரிய உதயத்திற்கு முன்னும், நள்ளிரவுக்குப் பின்னும் கூட்டங்கள் நடத்துவது இல்லை என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

உதவி போலீஸ் 'சூப்பரின்டெண்டெண்டு'கள் மட்டுமே கூட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றுள்ள விதி தளர்த்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டதற்கு ஒப்ப இனி வட்டாரப் போலீஸ் அதிகாரியே (சர்க்கிள் இன்ஸ்பெக்டர்) அனுமதி வழங்கலாம் என்று முடிவாகியிருக்கிறது.

ஒலி பெருக்கி அனுமதி பெற இரண்டு ரூபாய் கட்டணம் கட்ட வேண்டியிருப்பதைக் குறைக்க வேண்டும் என்ற யோசனை குறித்து சர்க்கார் சீக்கிரமே முடிவு மேற்கொள்ளும் என்று தெரிய வருகிறது.

## அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுமா?

புதுடில்லி, சன. 9—

'தொழிலாளர்கள் எந்த நிலையில் வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும் அவர்களுக்கு நஷ்டஈடு பெற உரிமை உண்டு' என்று இந்தியக் குடியரசுத் தலைவர் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப் போவதாக எதிர்பார்க்கப்படுகிறதாம்!

தொழிலாளர் தகராறு சட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்குள்ள இந்த உரிமையை, இந்திய உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் பாதித்திருப்பதை ஒட்டியே இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுமாம்!

## செயற்கை இரப்பர் தொழிற்சாலை

### வடக்கிலேயே நிறுவ முடிவு?

புதுடில்லி, சன. 8—

ரூ. 15 கோடி செலவில் ஏற்படவிருக்கும் செயற்கை இரப்பர் தொழிற்சாலை பெரெல்லியில் ஏற்படுத்தப்படுமாம். அங்கு எரி சாராயம் அதிகம் கிடைப்பதே அதற்குக் காரணமாம்! மேலும் அங்குள்ள சர்க்கரை ஆலைகளின் மூலம் துணைப்பொருளாக எரி சாராயம் தயாராகிறதாம்.

## இராஜபாளையத்தையும் கேட்பாராம்!

### ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறுபற்றி சஞ்சீவிரெட்டி

ஐதராபாத், ஜன. 10—

"காவேரி வரையில், நமக்கு உரிமையான ஒவ்வொரு அங்குல நிலத்தையும் தமிழரிடமிருந்து நாம் கேட்போம்; அதேபோல, தமிழருக்கு உரிய பகுதிகளைத் தந்து விடுவோம்,"

என்று, ஆந்திரப் பிரதேச முதன் மந்திரி என். சஞ்சீவ ரெட்டி பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள தமிழர் பகுதிகள் என்று சென்னை நிதிமந்திரி சுப்பிரமணியம் கோரியிருப்பது குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது, 'அது, அவரது ஆசையின் விளைவு' என்று கூறிவிட்டு, சஞ்சீவ ரெட்டியார், 'அப்படியானால் நாம் இராசபாளையம்கூட நமக்கு வேண்டுமென்று கேட்கலாம்' என்றும் கூறியிருக்கிறாராம்!

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11-1-'57 வெள்ளி


# 'ரோஜா மலரை எந்தப் பெயரால் அழைத்தாலும் மணம் கமழும்'

# 'அதுபோல, கழகத்தை எவர் எப்படி அழைத்தாலும் அதன் நறுமணம் மாருது'

# விசைத்தறியும் கைத்தறியும்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்திலிருந்து, மக்களின் துணித் தேவை நாளுக்கு நாள் பெருகிவரக்கூடும் என்று திட்டத் தயாரிப்பாளர்கள் கூறினதை இந்தியப் பேரரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவ்வாறு மெள்ள மெள்ளப் பெருகிவரக்கூடும் என எதிர்பார்க்கப்படும் துணித் தேவையை, உற்பத்தி செய்யும் பொறுப்பை ஆலைத் துறைக்கும் கைத்தறித் துறைக்கும் பகிர்ந்தளித்திருக்கிறது இந்தியப் பேரரசு.

இப்பொழுதுள்ள கைத்தறிகளைக் கொண்டு மட்டுமே, இரண்டாவது திட்டத்தில் தேவைப்படக்கூடும் எனத் தாம் நம்பும் துணியின் அளவை உற்பத்தி செய்ய முடியாது என இந்தியப் பேரரசு கருதுகிறது. அதன் பலனாக 35,000 விசைத்தறிகளைக் கொண்டு மிகுதியாகத் தேவைப்படும் 20 கோடி கெஜத் துணியை உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கிறது அப்பேரரசு.

இந்த வாதத்தை, விசைத்தறித் திணிப்புக்கான முதற் காரணமாக, இந்தியப் பேரரசு கூறிவருகிறது.

கைத்தறி நெசவாளர்களின் இன்றைய வாழ்க்கைத்தரம் திருப்திகரமானதாக இல்லை. அவ்வாழ்க்கைத்தரம் திருப்திகரமானதாக உயர்த்தப்பட வேண்டியது கட்டாயமாகும். அப்படி உயர்த்தப்படுவதற்கு அவர்கள் வருமானத்தைப் பெருக்கவேண்டியது கட்டாயமாகும். விசைத்தறி மூலம் தான் கைத்தறிக்காரர்களின் வருமானத்தைபெருக்கி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது சாத்தியமாகும் என்று நெசவாளர்களின் வாழ்க்கைத்தர உயர்வை, விசைத்தறித் திணிப்புக்கான மற்றொரு காரணமாக இந்தியப் பேரரசு காட்டுகிறது.

விசைத்தறித் திணிப்புக்காகக் காட்டப்படும் இரண்டாவது காரணத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்தியப் பேரரசின் உள்ளக்கிடக்கையை மதிப்பிட்டால், நெசவாளர்களின் வருமானப் பெருக்கத்தையும், அதன் விளைவாக அவர்களுக்கு ஏற்படக்கூடிய வாழ்க்கைத் தர உயர்வையும் இந்தியப் பேரரசு அடிப்படை இலட்சியமாகக் கொள்ளுகிறது என்றே முடிவு கட்டவேண்டியதாகிறது.

இரண்டாவது திட்டக்காலத்தில் மக்களின் துணித் தேவை மிகுதியாகப் பெருகக்கூடும் என்பது எதிர்பார்க்கப்படும் மதிப்பீடேயாகும். பேரரசு எதிர்பார்க்கின்ற அளவிற்குத் துணித் தேவை பெருகக்கூடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. எனவே எதிர்பார்க்கப்படும் ஐயத்திற்குரிய ஒரு விளைவைப் பொருட்டாகக் கொண்டு விசைத்தறித் திணிப்புக்கு வழிசெய்யக் கூடாது என்பது எதிர்ப்பாளர்களின் எதிர்வாதமாகும்.

எதிர்பார்க்கின்றபடி துணித் தேவை பெருகுவதாக இருந்தாலுங்கூட, இருக்கின்ற கைத்தறிகளுக்குத் தேவையான நூலை, காலாகாலத்தில் கொடுத்துவந்தால், கைத்தறித் துறையின் மூலமே, அப்பெருகி வரும் துணியின் அளவிற்கு மேலும் உற்பத்தி செய்வது சாத்தியமாகும் என்றும், கைத்தறித் துறையினர் வாதிடுகின்றனர்.

அதுவுமன்றி, இப்பொழுது இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் 28 இலட்சம் தறிகள் இருக்க 128 ஆயிரம் தறிகளே இருக்கின்றன என்று, இந்தியப்பேரரசு இருக்கும் தறிகளைக் குறைத்து மதிப்பிட்டுள்ளது. எனவே, இருக்கும் 28 இலட்சம் தறிகளுக்கும் தேவையான நூலை காலாகாலத்தில் வழங்க இந்தியப் பேரரசு முன்வருமானால், இரண்டாவது திட்டத்தில் தேவைப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் துணித் தேவையை, கைத்தறித் துறையின் துணைகொண்டே உற்பத்தி செய்ய முடியும் என்று, கைத்தறித் துறையினர் வாதிடுகின்றனர்.

விசைத்தறித் திணிப்பினால் நெசவாளர்களின் வருவாய் பெருகுவதற்கு வழி இருக்கிறது என்பது எவ்வளவு உண்மையோ, அதில் கடுகத்தனையும் குறையாத அளவில் கைத்தறித் துறையிலீடுபட்டுவரும் நெசவாளர்கள் வேலையிழப்பதும் நிச்சயமாகும் என்று கைத்தறித் துறையினர் வாதிடுகின்றனர்.

விசைத்தறியில் ஈடுபடும் ஒரு நெசவாளியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, கைத்தறிகளை நம்பி வாழ்ந்து கொண்டுவரும் ஏறத்தாழ பத்து நெசவாளர்களின் வாழ்வில் இல்லாமையைப் புகுத்துவது முறையா என்று கைத்தறித் துறையினர் சீறிக் கேட்கின்றனர்.

கைத்தறித் துறையினர் விசைத்தறித் திணிப்பு எதிர்ப்புக்குக் காட்டும் நியாயத்தை அப்படியே ஒதுக்கித் தள்ளிவிடுவதற்கில்லை. அண்மையில் சென்னைக்கு வந்த இந்தியப் பேரரசு அமைச்சர் தேசாய் கூட, ஒரு விசைத்தறிக்கு பத்து கைத்தறி தொலைந்துபோகும் என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார். நிற்க,

விசைத்தறித் திணிப்பு ஏற்பாடு இரண்டாவது திட்டத்தில் இடம் பெற்று இருக்கிறது. திட்டத்தை நிறைவேற்றும் நிலையில் உள்ள இந்தியப் பேரரசு, மாகாணங்களின் விருப்பறிய முன்வந்தது.

அதன்படி இப்பொழுது ஐந்து மாகாணங்கள் விசைத்தறித் திணிப்புக்கு ஒப்புக்கொண்டுள்ளன என்று தகவல் தரப்பட்டு இருக்கிறது. அவ்வைந்து மாகாணங்களும் மொத்தத்தில் 6,055 விசைத்தறிகளை ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்திருக்கின்றன. ஆனால் சென்னையும் ஆந்திரமும் விசைத்தறித் திணிப்புப் பற்றிய தமது முடிவை இன்னமும் இந்தியப் பேரரசிற்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்காமலே இருக்கின்றன.

சென்ற மூன்று திங்களுக்கு முன் ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் வீதம், இரண்டாண்டு காலத்திற்குள் ஆறாயிரம்விசைத் தறிகளைத் திணிக்க சென்னை அரசாங்கம் முடிவு கட்டி இருப்பதாக, தொழில் அமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் சட்டசபையில் தெளிவாகக் கூறி இருந்தார். ஆனால், அதற்கு முரணாக, சென்ற திங்கள் இறுதியில அதே தொழில் அமைச்சர், அதே சட்டசபையில், 'விசைத்தறி எதிர்ப்புதான் சென்னை அரசாங்கத்தின் கொள்கை' என்று ஆணித்தரமாகப் புகன்றுள்ளார்.

'விசைத்தறி எதிர்ப்புதான் சென்னை அரசாங்கத்தின் கொள்கை' என்று அழுத்தம் திருத்தமாகத் தொழில் அமைச்சர் சட்டசபையில் கூறியுள்ளதை, இத்தனை நாளைக்குப் பிறகும் இந்தியப் பேரரசிறகு அறிவிக்காதிருப்பது ஏன்? இந்தக் காலதாமதத்திற்கு என்ன காரணம்? இதில் அடங்கியுள்ள இரகசியம்தான என்ன?

## மாநிலம் முழுவதிலும் ஆதாரக் கல்வியாம்!

### எல்லாத் துவக்கப் பள்ளிகளும் ஆதாரப் பள்ளிகளாக மாறுமாம்

சென்னை, சன. 9—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சென்னை மாநிலத்தில் உள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் ஆதாரப்பள்ளிகளாக மாற்றிவிட வேண்டும் என்று மாநில ஆதாரக்கல்வி ஆலோசனைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

சாதாரண பயிற்சிப் பள்ளிகள், 1956-57-ல் 16; 1957-58-ல் 32; 1958-59-ல் 48; 1959-60-ல் 64; 1960-61-ல் 80 என்ற அளவில் ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றப்படும். இதே காலத்தில் 20 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படுமாம். 400 பட்டதாரிகளுக்கும் ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சியளிக்கப்படும்.

ஆதாரக் கல்வி பள்ளிகளில் எட்டாவது வகுப்பைப் படித்து முடித்த மாணவர்களுக்காக 30 உயர்தரப் பள்ளிகள் ஆரம்பிக்கப் படுமாம்.

## மணிக்கு 1,250 மைல் பறக்கும் விமானம்

பாரிஸ், சன. 9—

மணிக்கு 1,250 மைல் வேகத்தில் 60 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் விமானமொன்று பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்; இஸ்திரே என்ற இடத்தில் இதன் சாதனை காட்டப்பட்டதாம்.

## மூலதன இலாப வரி

### ரூ. 8 கோடி கிடைக்குமாம்

புதுடில்லி, சன. 8—

மூலதன இலாப வரியின்மூலம் 1957–58-ல் ஐந்து முதல் எட்டு கோடி ரூபாய் வரையில் எதிர்பார்க்கப்படுவதாக இந்திய அரசாங்க அதிகாரியொருவர் அறிவித்துள்ளார்.

## சென்னையில் பொதுச்செயலாளர் பேருரை

"போட்டிப் பந்தயத்தைப் போன்றதுதான் தேர்தல். ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டவன், பக்கத்தில் ஓடுபவன் யார் என்று கவனிக்கமாட்டான். 'நாம் ஓடுவோம்; நம்மாலான மட்டும் முயற்சிப்போம்; வெற்றி இல்லை என்றால் மீண்டும் முயற்சிப்போம்; அடுத்தத் தடவையாவது வெற்றி பெறுவோம' என்றுதான் அவன் எண்ணுவான். பந்தயத்தில் ஈடுபட்டிருக்கின்றவனின் அந்த உணர்ச்சியுடன்தான் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது; தேர்தலில் ஈடுபடுவது ஜனநாயகக் கடமைகளில் ஒன்ருகக் கழகம் கருதுகிறது. வெற்றி பெறும் நோக்கத்துடன் ஈடுபடுகிறோம். அதில் தோல்வியடைந்தாலும் கவலையில்லை; அடுத்த தடவையாவது வெற்றிபெறும் வாய்ப்பை தி. மு. கழகம் ஏற்படுத்திக்கொள்ளும். ஆனால் அதே நேரத்தில், பந்தயத்தில் ஓடுபவன் பக்கத்திலே ஓடுகின்றவனின் காலைத் தட்டிவிடுவதைப் போன்ற ஈனச் செயலில் ஈடுபடாது. நாம் ஓட முயலுகிறோம்; ஆனால் மாற்றானைத் தட்டிவிட முயலவில்லை. ஆனால் மாற்றானைத் தட்டிவிட்டுத் தான் ஓடமுயலுபவனைப் போன்றவர்கள்தான் கழகத்தைப் பார்த்துக் கேலி செய்கிறார்கள்.

"மெள்ள மெள்ள வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை தி. மு. கழகம் ஏற்படுத்திக் கொள்ளும். தோல்வியடைந்து விட்டோமென்றால் அதற்காகத் தொடை நடுங்கிக்கொண்டு மூலையில் முக்காடிட்டுக்கொண்டு உட்கார்ந்துவிடமாட்டோம்.

"ஏதாவது ஒன்று செய்ய 100 பேரில் இரண்டு பேர் துணிந்துவிட்டால் போதும்—மீதி இருக்கிற 98 பேர் நிச்சயம் பின் தொடர்ந்து வருவார்கள்; இதைத்தான் உலக வரலாறும் எடுத்துக் கூறுகிறது. இப்படி நமது நாட்டின் அவல நிலையைப்போக்க முன்வரும் அந்த இரண்டு பேர்தான் தி. மு. கழகம். அதை மற்றவர்களும் பின் தொடரும் காலம் விரைவிலேயே வரும்.

"உலகில் சூழ்ந்திருக்கும் இருளை அகற்றி ஒளி பெருகவும், மயிலாடவும் குயில் பாடவும், மக்கள் முகத்திலே களிப்பும் ஏற்படுத்தும் வகையில் செஞ்ஞாயிறு தோன்றுவதுபோல், தமிழகத்தின் அரசியல் வானிலே திரையிட்டுக் கொண்டிருக்கிற இருளைக் கிழித்துக்கொண்டு உதய சூரியன் புறப்பட்டுவிட்டான். அதன் அருமையை உணர்ந்ததால்தானே என்னவோ, 2,000 ஆண்டுகளுக்கு முன்பே இளங்கோவடிகள் 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்று கூறியிருக்கிருர் !

"கழகத்தின் வெற்றிக்காக ஆக்கமும் ஊக்கமும் தந்து, தேர்தல் பணிகளில் கழகத் தோழர்கள் ஈடுபடும் நேரத்தில் மாற்றாரின் ஏசலுக்கும் தூற்றலுக்கும், இழி சொல்லுக்கும் பழி சொல்லுக்கும் செவி சாய்க்கவேண்டாம். அவைகளையெல்லாம் புன்சிரிப்போடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

"ரோஜா மலரை எந்தப் பெயரிட்டழைத்தாலும் நறுமணம் வீசும் என்று மேனாட்டு அறிஞர் கூறியிருக்கிறார். ரோஜாவை எருக்கம் பூ என்று அழைத்து நுகர்ந்தாலும் நறுமணம் கமழத்தான் செய்யும். அதுபோல, தி. மு. கழகமும், யார் என்ன சொன்னாலும் மணக்கத்தான் செய்யும். நம்மையெல்லாம் மடையர்கள் என்றேகூடச் சொல்லட்டும் மாற்றார்—என்றாலும் நாம் மணப்போம். நம்மைத் துரோகிகள் என்றோ, நடிகர்கள் என்றோ கூறட்டும்; பரவாயில்லை. ஆனால் நம்மை, மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். எனவே நாம் புன்முறுவல் பூரிப்போம்—எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாக இருப்போம்.

"எனவே, இவ்வித ஏசல், தூற்றல்களுக்காகச் சோர்ந்து போகாமல், தேனீக்களைப்போல், எறும்புகளைப்போல் சுறுசுறுப்பாகக் கழகத் தோழர்கள் பணியாற்றக் கேட்டுக்கொள்கிறேன். நல்ல திறமையும் ஆற்றலும், வீரமும் பண்பும் பெற்று, உடல் வலிவுடனும் உள்ள உறுதியோடும், நேர்மையுடனும் உழைக்க உங்களையெல்லாம் அன்புடன் அழைத்து ஆதரவு தாரீர் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடந்த 8-ந் தேதியன்று சென்னை—சூளை வ. பு. அ. சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக ஆண்டு விழா, தி. மு கழகத் தேர்தல் நிதி அளிப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவரது சொற்பொழிவின் இரு பகுதிகள் முன்னரே தரப்பட்டிருக்கிறது; இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது :—

### திருப்பூர் குமரன் இருந்த இடமா அது?

"பணபலத்தால் எங்களால் எதுவும் முடியும்; எங்களிடம் டி. டி. கே இருக்கிறார்—கோயங்கா இருக்கிறார்' என்று காங்கிரசார் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இவர்களெல்லாம் யார்? வெள்ளைக்காரன் காலத்தில், 'வெள்ளைக்காரத் தாசானுதாசர்கள்; வெள்ளையர் பூட்சுகளை நக்கினவர்கள்' என்று எந்த பட்டயக்காரர்களைக் கூறினார்களோ அவர்களை—திருப்பூர் குமரனைப் பெற்றெடுத்தக் காங்கிரஸ் இன்று தன்னருகில் வைத்துக் கொண்டு வெற்றி பெற்றுவிடலாம் என்று எண்ணுகின்றனர்.

### உள்ளத்தை உணர்ந்தோர் உணர்ச்சி கொண்டோர்

"ஆனால், மக்கள் நமது கொள்கைகளை உணர்ந்திருக்கின்றனர். உள்ளத்தில் ஆர்வமும் உணர்ச்சியும் எழுச்சியும் கொண்டிருக்கின்றனர். இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு காங்கிரசை எதிர்க்கும் நாம், அதற்கா

(4-ம் பக்கம் பார்க்க)

# நெசவாளர் வாழ்வு சரியத் தொடங்குகிறது!

## கைலி உற்பத்தியாளர்களுக்குப் புதிய தொல்லை

### வட ஆப்பிரிக்க வியாபார மந்தமே காரணமாம்

### சில உள்நாட்டு வியாபாரிகளே காரணம் என்கிறார் ஏற்றுமதியாளர்!

சென்னை, ஜன. 9.—

வடஆப்பிரிக்காவிற்கே பெரிதும் ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த 'சென்னை கை குட்டை' என வழங்கப்பட்டுவரும் கைலி துணி இங்கு விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிறது. இத்தேக்கத்தினால் கைலியையே நம்பி வாழ்ந்துவரும் நெசவாளர்கள் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

மேற்படி 'சென்னைகைக்குட்டை' சென்னையிலும் ஆந்திராவிலும் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வரும் உயர்ந்த ரகத் துணி வகையில் முதன்மையானதாகும்.

பல ஆண்டுக்காலமாக அத்துணி மேற்கு ஆப்பிரிக்காவிற்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்திருக்கிறது. அத்துணி உள்நாட்டில் விற்பனை யாவது கிடையாது.

உற்பத்தியாளர்களிடம் தங்கியுள்ள துணிகளை இங்குள்ள ஏற்றுமதியாளர்கள் கொள்முதல் செய்ய மறுக்கின்றனர் தங்கள் போக்கிற்கு ஆப்பிரிக்காவில் மேற்படி துணிக்குக் கிராக்கி இல்லாததே காரணம் என்று அவர்கள் சமாதானம் கூறுகின்றனர்.

இதுபற்றி இங்குள்ள ஏற்றுமதியாளர் ஒருவர் பின்வரும் தகவலைக் கூறியுள்ளார்:—

"மேற்கு ஆப்பிரிக்காவில் மந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது எனக் கூறப்படுவது, உண்மையில் மந்த நிலை அல்ல. ஆனால் இங்குள்ள சில வியாபாரிகள், தங்கள் சுயநலக் காரணமாக ஏழை நெசவாளர்களைச் சுரண்டக் கட்டிவிடப்பட்டுள்ள கற்பனையாகும். தாங்கள் விரும்பும் விலைக்கு 'சென்னை கைக்குட்டை'யின் விலையைக் குறைவாக்கும் நோக்குடனும், ஒப்பந்தத்தைப் பின்னர் முறித்துவிடும் எண்ணத்துடனுமே சிலர் துணித் தேவைக்கு ஆணை பிறப்பித்துள்ளனர்."

இதுபற்றி, பம்பாயிலுள்ள டெக்ஸ்டைல் கமிஷனருடன், சென்னையிலுள்ள துணை கமிஷனரும் ஆந்திரா—சென்னை உற்பத்தியாளர் பிரதிநிதிகளும் கலந்து பேசினர். விரைவில் இந்தியப் பேரரசின் முடிவு அறிவிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

## தேர்தலின் மகிமையே மகிமை!

### சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வாம்

டில்லி சர்க்கார் நிதி உதவியாம்!

புதுடில்லி, சன. 9—

மாநில சர்க்கார்களில் குறைவாகச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிப்பதற்காக டில்லி சர்க்கார் ரூ. 20 கோடிவரை உதவப்போகிறதாம்.

தேர்தல் நெருங்கும்போது, ஊழியர்களைப் பகைத்துக்கொள்ள விரும்பாத நிலையில், அவர்களை வஞ்சிக்கும் நோக்குடன் சர்க்கார் இந்த ஆசைவார்த்தைகளைக் கூறுவதாகத் தெரிகிறது.

எல்லா மாநிலங்களுக்கும் ஒரே வகையான சம்பள விகிதம் நிர்ணயிப்பது சாத்தியமில்லை எனவும், அந்தந்த மாநிலங்கள் தங்கள் வருவாய்க்கேற்ப ஊழியர்களின் சம்பளங்களை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும் என்றும். அந்தந்த மாநில சர்க்கார்கள் தங்கள் ஊழியர்களுக்கு இப்போது தர விரும்பும் சம்பள உயர்வுக்கான திட்டங்கள் குறித்து டில்லிக்குத் தெரிவிக்குமாறு கோரியிருப்பதாகவும் தெரியவருகிறது.

## தொழிலாளத் தோழர் தாக்கப்பட்டதை எதிர்த்து

### திருச்சி பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

திருச்சி, சன. 9—

திருச்சி மோட்டார் போக்குவரத்து, பொதுத் தொழிலாளர் சங்க உறுப்பினரும் டி. எஸ். டி. பஸ் கண்டக்டருமான மருதை என்பவரை, மேற்படி நிர்வாகத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கும் ஒரு சங்கத்தைச் சேர்ந்த சிலர் கடந்த 2-ந் தேதியன்று இரவு திடீரெனத் தாக்கிப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர்.

இச்சம்பவம், நகர தி. மு. கழகக் கிளைத் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிய வந்ததும், சுமார் 2,000-க்கு மேற்பட்டவர்கள் டி. எஸ். டி. கம்பெனி முன் கூடி, அவரை அடித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

உடனே மேற்படி சங்கச் செயலாளர் எஸ். ஜி. கிருஷ்ணனும மற்றும் தோழர்கள் எம். எஸ். மணி, ஐ. எம். ஷெரீப் ஆகியோரும் அங்கு விரைந்துசென்று, பொதுமக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

நிர்வாகத்தினரின் தூண்டுதலின் பேரிலேயே அவர் தாக்கப்பட்டிருப்பதைக் கண்டிக்கும் வகையில் மறுநாள் டி. எஸ். டி பஸ் தொழிலாளர் அனைவரும் வேலை நிறுத்தம செய்தனர்.

சம்பவம் குறித்து இறுதி முடிவு தெரியும் வரையில் வெளியே போவதில்லை என்று கம்பெனி முன் கூடிநின்ற பொதுமக்கள் அனைவரும் நின்றுகொண்டிருந்தனர்.

இதனால் வேறுவழியில்லாத நிர்வாகத்தினர், அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கி, அவரை அடித்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும், ஒர்க்ஷாப்பில் இருந்து வந்த டிராபிக் செக்ஷன் காரியாலயத்தை திருவானைக்கோவிலுக்கு மாற்றவும் ஒப்புதல் தந்தனர்.

தொழிலாளர் - நிர்வாகத்தினர் மேற்கொண்ட இவ்வுடன்பாட்டிற்குப் பின்னரே பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

பின்னர், வேலை நிறுத்தம் செய்த பஸ் தொழிலாளர்களும வேலைக்குத் திரும்பினர். ஏறக்குறைய 6 மணி நேரம் நகரில் பஸ்களே ஓடாததால், போக்குவரத்து அப்படியே நின்றுவிட்டது.

அடிபட்ட தோழர் மருதை சிரங்கம் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ந. நி.)

### 943 விபத்துக்கள்!

1956-ம் ஆண்டில், நாடு முழுமையிலும் நிலக்கரிச் சுரங்கங்களில் 943 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

## 'வர்த்தகர் சமுதாயத்தின் ஆதரவையும் இழந்துவிடுவீர்'!

### ஆட்சியாளருக்கு குடந்தைவர்த்தகர் சங்க எச்சரிக்கை

குடந்தை, சன. 8—

நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற நகர வர்த்தகர் சங்க அவசரச் செயற் குழுக் கூட்டத்தில், கடந்த டிசம்பர் 26-ந் தேதி நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில், 'ஒரு முனை விற்பனை வரி விதிப்பில் மற்றும் சில பொருட்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; விற்பனை வரி விலக்கு வரம்பை உயர்த்த வேண்டும்' என்று கோரப்பட்ட வெட்டுப் பிரேரபணை ஒன்று, ஆளும் கட்சிப் பெரும்பான்மை பலத்தினால் முறியடிக்கப்பட்டது குறித்து வருத்தம தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் இப்படிப்பட்ட முறைகளில் நடந்துகொள்வதின்மூலம், வர்த்தகர் சமுதாயத்தின் ஆதரவையும் ஆட்சியாளர் இழந்துவிட வேண்டாம்—என்று மேற்படி வர்த்தகர் சங்கம் மாநிலசர்க்காரை எச்சரித்திருக்கிறது!

அண்மையில் குடந்தையில் கூட இருக்கும் தஞ்சை மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் கமிட்டியின் மூன்றாவது கூட்டத்தில், மேற்படி சங்கச் சார்பில் பிரரேபிக்க நான்கு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. (ந. நி)

## சென்னை-ஆந்திர எல்லைப் பிரச்சினை

### கூட்டுப் பேச்சுவார்த்தை நடைபெறக்கூடுமாம்

சென்னை, சன. 8—

சென்னை—ஆந்திரா எல்லைப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு மத்திய அமைச்சர் படாஸ்கருடன் இம்மாத இறுதியில், இரு மாநில அமைச்சர்களும் கூட்டாகப் பேச்சுவார்த்தைகள நடத்துவரெனத் தெரிகிறது.

முதலில் சன. 18-ந் தேதி முதல் 21-ந் தேதிவரையில் ஐதராபாத்தில் ஆந்திர சர்க்கார் அமைச்சருடன் படாஸ்கர் பேச்சுவார்த்தை நடத்துவார். எற்கனவே அவர் சென்னை அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இரு தரப்பினரின் வாதங்களையும் அறிந்தபின் கூட்டு மாநாட்டில், எல்லைத் தகராறுகள் பற்றி சமரசம் ஏற்படுத்த மத்திய அமைச்சர் முயற்சிப்பார்; அவர் கூறுகிற யோசனையை ஒட்டி சமரசத் திட்டம் உருவாகும்; அதனை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்வார்கள்; ஆனால், சமரசத் திட்டம் ஏற்படாமல் மத்திய அமைச்சர் முயற்சி தோல்வியில் முடிந்தால், எல்லைத் தகராறு மண்டல சபையின் தீர்ப்புக்குவிடப்படும்.

## பிரும்மாண்டமான சோவியத் தளங்கள்

### அல்பேனியாவில் உருவாகிறது?

சோவியத் யூனியன், அல்பேனியாவில் பெரிய கடற்படை, விமானப் படை, சப்மரீன் படை, ஹெலிகாப்டர் படைத் தளங்களை நிர்மாணித்து வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்!

### உண்மையாகவா?

தைப்பே, சன. 8—

கம்யூனிஸ்டு சீனாவை எதிர்த்துத் தாக்குவதற்கு தேசிய சீனப் படைகள் தயாராக இருப்பதாக பார்மோசா முதலமைச்சர், கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கூறினாராம்.

## ஆந்திரத்தில் இரசாயன கரித் தொழிற்சாலை

ஆந்திர மாநிலத்தில் கார்பன் கரி உற்பத்திக்கான தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவதற்குத் திட்டக்குழு யோசித்து வருவதாக ஆந்திர கிசான் குழுவிற்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

உரல் இயந்திர உற்பத்திக்கான தொழிற்சாலை ஒன்றை விசாகப்பட்டினத்தில் நிறுவுவதற்கும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

## ஆங்கிலப் பயிற்சியின் தரம் குறைந்துவிட்டதாம்!

### டில்லி கவலை கொள்கிறது?

புதுடில்லி, சன. 9—

ஆங்கிலப் பயிற்சியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் அகில இந்திய ஆங்கிலப் பயிற்சிக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கான திட்டத்தை இந்திய சர்க்கார் கல்வி இலாகா தயாரித்து வருகிறதாம்; பண்டித நேருவின் யோசனை மீதே இக்கழகம் நிறுவப்படுவதாகத் தெரிகிறது.

ஆங்கிலப் படிப்பின் தரம் வெகுவாகக் குறைந்துவிட்டது என்ற உண்மை இப்போது புலனாகியுள்ளதாம்!

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆங்கில மொழிப் போதனையில் சரியாகக் கவனம் செலுத்தப்படவில்லையாம்!

## இரயில்வே ஊழியர் குழந்தைகளுக்கு வசதி

### இந்தியப் பேரரசின் திட்டம்

புதுடில்லி, சன. 9—

நாட்டின் பல்வேறு இரயில்வே பகுதிகளிலும் பணியாற்றும் ஊழியர் குழந்தைகளின் நலனுக்காக 'விடுதி'கள் ஏற்படுத்துவது குறித்து இந்தியப் பேரரசு யோசித்து வருவதாகத் தெரிகிறது.

இரயில்வே ஊழியர்களின் குழந்தைகளுக்காகத் தற்போது 156 பள்ளிகளை மட்டுமே இரயில்வே இலாகா நடத்தி வருகிறதாம்.

இந்தப் பள்ளிகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும், புதுப் பள்ளிகள் திறப்பதற்கும் ரூ.- 3 66,000 செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

நடைமுறை ஆண்டில் கல்விக்காக ரூ. 1,11,16,000 செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்களின் குழந்தைகள் ஆயிரம் பேருக்கு ரூ. 15 முதல் ரூ 50 வரை உதவிச் சம்பளம் தருவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

# சந்திரோதயம்

★

| ஜனவரி | ஜனவரி |
|---|---|
| 15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்) | 21: திருச்சி நகர் |
| 17: குமாரபாளையம் | 22: சேலம் நகர் |
| 18: உடுமலை | 23: போளூர் வ.ஆ. |
| 19: கணியூர் | 24: விழுப்புரம் |
| 20: மதுரை நகர் | 25: தஞ்சை நகர் |

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★



## ஆமதாபாத்தில் 'நம் நாடு'

விற்பனையாளர்கள்:

வே. அருளப்பன், தி. மு. கழகம், சமால்பூர், ஆமதாபாத்-1.

ச. சந்திரன், பத்ராகாளிசால் மணிகோர் ஆமதாபாத்-8.

## தி. மு. க. தேர்தல் நிதி சிறப்புச் சொற்பொழிவு

13—1—57 காலை 9 மணிக்கு புதுக்கோட்டை நகர தி. மு. கழகச் சார்பில், புதுக் கோட்டை பிரகதாம்பாள் தியேட்டரில் தி. மு. கழகத் தேர்தல் நிதி சிறப்புச் சொற் பொழிவுக் கூட்டம், தோழர் அன்பில்-தர்மலிங்கம் தலைமை யில் நடைபெறும். தோழர் மு. கருணாநிதி 'பொதுத் தேர் தலும் தி. மு. கழகமும்' என்ற தலைப்பிலும், எஸ். எஸ். இராசேந்திரன் 'கலை யும் வாழ்வும்' என்ற தலைப் பிலும் சிறப்புச் சொற்பொழி வாற்றுவர்.

## மதுரை நகர் தி. மு. க. மாணவர் கிளைச் செயற் குழுக் கூட்டம்

13—1—57 காலை 10 மணிக்கு, மதுரை நகர் தி. மு. கழக மாண வர் கிளைச் செயற் குழு, நகர தி. மு. கழக அலுவலகத்தில் நடை பெறும். கழக உறுப்பினர் அனை வரும் தவறாது வருகை தரக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## டி. கே. சீனிவாசன்

இலங்கைச் சுற்றுப்பயணம்

சென்னை, சன. 10—

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் இம்மாதம் 12-ந் தேதி மாலை 4-30 மணிக்குத் திருச்சியிலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, பதுளை, கொழும்பு ஆகிய இடங்களில் அகில இலங்கை பகுத்தறிவு இயக்கம், திருவள்ளுவர் கழ கம் இவற்றின் சார்பில் ஏற் பாடு செய்யப்பட்டுள்ள கூட் டங்களில் கலந்துகொண்டு வருகிற 20-ந் தேதி திருச்சி திரும்புவார்.

## மதுரையில் தேர்வுக் குழு

12—1—57 சனி காலை 10-மணிக்கு, மதுரை-நகர தி. மு. கழகக் கட்டிடத்தில், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தொகுதிகளுக்கான அபேட்ச கர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி யில், தி. மு. கழகத் தேர்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத் தம்பி, எஸ். முத்து ஆகியோர் ஈடுபடுவர்.

—தி. மு. க. தலைமை நிலையம்

## பம்பாய் தி. மு. க. கிளை செயலாளர்கட்கு:

"பம்பாய் தி. மு. கழகக் கிளை களின் சார்பில் வசூலாகி வரு கின்ற தி. மு. கழகத் தேர்தல் நிதித் தொகை அனைத்தையும் இத்திங்கள் 20-ம் நாளுக்குள் பொதுச்செயலாளர் அவர்கட்கு அனுப்பிவிட எண்ணியுள்ளோம் எனவே தேர்தல் நிதி வசூலிக் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எல்லா கிளைக் கழகச் செயலா ளர்களும் தனிப்பட்ட தோழர் களும் ஜனவரி 20-ம் நாளுக் குள் தாராவி 'திராவிடர'த் தில் வந்து தவறாது வசூலித்தத் தொகையைச் செலுத்தி உதவ வேண்டுகிறேன்,"

என்று, பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

## மதுரை மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழா

13—1—57 மாலை 6 மணிக்கு மதுரை வடக்கு மாசி வீதியில், மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழா, தோழர் எல். கே. என். மணியன் தலைமையில் நடைபெறும். தோழர் கள் இ. மனோகரன், மதுரை எஸ் முத்து எம். சி., மது. இ. பழனி யப்பன், மா. பாண்டியன் பேசுவர்.

## சென்னையில் சிறப்புக் கூட்டம்

★

### அண்ணா, நெடுஞ்செழியன்

பேசுவர்

13—1—57 ஞாயிறன்று காலை 9-மணியளவில், சென்னை—கோகலே மண்டபத்தில், நண்பர் சங்கத்தின் சார்பில் சிறப்புக்கூட்டம் ஒன்று நடை பெறும்.

அண்ணா அவர்கள் 'தேவ லோகத்தில் சில காட்சிகள்' எனும் பொருள் பற்றியும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'பண்டைத் தமிழகத்தில் சில காட்சிகள்' எனும் பொருள் பற்றியும் பேசுவர்.

## திருப்பூர் தி. மு. கழக ஆலைத் தொழிலாளர்

தேர்தல் நிதிச் செயற்குழு

"12—1—57 மாலை 6 மணிக்கு, திருப்பூர் டிராவலர்ஸ் பங்களா வில் திருப்பூர் தி. மு. க. ஆலைத் தொழிலாளர் தேர்தல் நிதிச் செயற்குழுக் கூட்டம் நடை பெறும். திரட்டப்பட்ட நிதி நகர தி. மு. கழகச் செயலாள ரிடம் ஒப்படைக்கப்படும். உறுப் பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்,"

என்று, திருப்பூர் தி. மு. கழக ஆலைத் தொழிலாளர் தேர்தல் நிதிக் குழுச் செயலாளர் என். பால்ராசு அறிவிக்கிறார்.

## சென்னை 36-வதுவட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

13—1—57 காலை 10 மணிக்கு சென்னை 36-வது வட்டக் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம், கோடம்பாக்கம் பெருஞ்சாலை எண். 95 தோழர் ஏ. சி. இராச ரத்தினம் இல்லத்தில் நடை பெறும். கிளைக் கழகப் பணிமனை அமைத்தல், துவக்க விழா ஆகி யவை ஆய்வுக்கெடுத்துக்கொள் ளப்படும்.

## ரோஜா மலரை...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கும் சில்லறைச் செலவுகளுக் காக மக்களிடம் வந்து சில் லறையாகப் பணம் கேட் கிறோம்.

"பணத்தை வைத்துக்கொண்டு தேர்தலில் ஜெயித்துவிடலாம் என்று நினைக்கும் காங்கிரசாருக்கு உணர்த்த ஆசைப்படுகிறேன். இப் போதிருக்கிற காங்கிரசாரைவிட எந்த வகையிலும் பொப்பிலி அர சரும் பித்தாபுரம் அரசரும் பணத் தில் குறைந்தவர்களல்ல தேர்த லில் இலட்சம் இலட்சமாகப் பணத் தைச் செலவழித்தும் தோல்வி கண்டனர். ஏன்? இலட்சக்கணக் கில் வாரி இறைத்த பொப்பிலியை எதிர்த்து சாதாரணத் தொழிலா ளர்களை நம்பிப் போட்டியிட்ட வி. வி. கிரி வெற்றி பெற்றாரே— எப்படி? இதையெல்லாம் இன்றை யக் காங்கிரசாருக்கு உணர்த்த ஆசைப்படுகிறேன்.

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்)

## நகரசபை ஊழியர்களுக்கு கிராக்கிப்படி உயர்வு

சென்னை, சன 8—

நகரசபை ஊழியர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கு அளிக் கப்படும் அளவிற்கு 'கிராக்கிப் படி' கொடுப்பதென்றும், 1956-நவம்பர் முதல் அதைக் கணக்கிட் டுத் தருவதெனவும் முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

நகரசபை நிர்வகிக்கும் பள்ளி களில் பணியாற்றும் ஆசிரியர்களுக் கும் இவ்விதம் அளிக்கப்படுமாம்.


ஆண்டுதோறும் அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றுவரும்

# 'திராவிடன்' பொங்கல் மலர்

★

அண்ணா, இரா. நெடுஞ்செழியன்

மற்றும் பல கழக முன்னணி எழுத்தாளர்கள் அளிக்கும் சுவை மிக்க விருந்து!

★

ஓவிய நிபுணர்

பாலு சகோதரர்களின்

இணையற்ற முகப்பு!

★

எல்லாம் கிளேஸ் தாள்களில்

144 பக்கங்கள் - விலை ரூ. 1-4-0

★

13—1—57 அன்று எல்லா ஊர்களிலும், இரயில்வே நிலையங்களில் உள்ள 'சுதேசமித்திரன்' ஸ்டால்களிலும் கிடைக்கும்.

★

மானேஜர் — 'திராவிடன்' — சென்னை-1



## பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

12-1-1957 (சனிக்கிழமை) மாலை 6-30மணிக்கு

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு

இரு கலை விருந்துகள்!

திருமதி டாக்டர் சத்தியவாணி முத்து தலைமையில்

சிவாஜி கணேசன் குழுவினர் அளிக்கும்

'பராசக்தி'

இரவு 10 மணிக்கு மேல்

T. M. B. கிருஷ்ணராஜ் குழுவினர் அளிக்கும்

'மரண மூச்சு'

(தமிழ் நாடகம்)

தனிப்பகுதி: ரூ. 3, 2, 1. அணா 8. திறந்த வெளி இலவசம்

பிரவேசக் கட்டணம் 0—5—0

13—1—57-ல்:

காக்கா இராதாகிருஷ்ணன், டி. கே. சம்பந்தி அளிக்கும்

'மகாபுத்திசாலி'


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


## தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக

பூந்தமல்லி கரையான் சாவடியில்

15-1-57 செவ்வாய் இரவு 10-மணிக்கு

★

அண்ணா, — மற்றும் கழகத் தோழர்கள் நடிக்கும்

# சந்திரோதயம்

(புதுமை நாடகம்)

—தலைமைக் கழகம் (தி. மு. க.)


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


## சென்னையில் திராவிடர் திருநாள்

14—1—57 திங்கள் மாலை 4-மணிக்கு

மயிலை கபாலி டாக்கீஸ் எதிரிலுள்ள திடலில் சிலம்ப விளையாட்டுடன் துவங்கும்

★

தலைவர்: கோ. செங்குட்டுவன்

பேசுவோர்:

# இரா. நெடுஞ்செழியன்

என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு, ஆசைத்தம்பி, கண்ணதாசன் சத்தியவாணிமுத்து, அருண்மொழி

★

தோழியர் வசந்தவல்லி குழுவினர் இன்னிசை விருந்தளிப்பர்

குறிப்பு: விழா அமைப்புகளை 50-வது வட்ட தி. மு. கழகம் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறது.

44-வது வட்ட தி. மு. கழகத்தினர் தேர்தல் நிதி அளிப்பர்.

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


## சென்னை மகளிர் மன்றம் - கலை நிகழ்ச்சி

★

15—1—57 மாலை 5-மணிக்கு

செயின்ட் மேரிஸ் மண்டபத்தில்

அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்

★

எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி நடிக்கும்

# 'உதய சூரியன்'

நாடகம் — மு. கருணாநிதி எழுதியது

இராஜசுலோசனா 'தேசிங்கு ராஜன்' (ரங்கோன் ராதா) நிகழ்ச்சிகள் பங்கேற்கும்

★

குசலகுமாரி நடன நிகழ்ச்சியும் நடைபெறும்

நுழைவு நன்கொடை : ரூ. 10, 5, 3, 2, 1.

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்:—

மகளிர் மன்ற அலுவலகம், 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, சென்னை-1, புவனேசுவரி-நடராசன், 'திராவிடன்' அலுவலகம், அம்மன் கோயில் தெரு, கொண்டித்தோப்பு.

சற்குணா கபே, மணிக்கார் செவல்ரி ரோடு வண்ணாரப்பேட்டை.

15—1—57 காலை முதல் செயின்ட் மேரிஸ் ஹாலில் டிக்கெட்டுடன் கிடைக்கும்.


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## சென்னை 5-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

12—1—57 இரவு 7 மணிக்கு சென்னை 5-வது வட்டக் கிளைக் கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் கிளைக் கழக இல்லத்தில் நடை பெறும். பலமுக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக் கெடுத்துக்கொள்ளப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக் காக தோழர் இரா. நெடுஞ் செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறு கிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ் செழியன் எம். ஏ.